**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**

**முன்னிலை : திரு. வ. ராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2022 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை**

**இ.ஏ.எண்.1/2020 இன் இ.பி.எண்.9/2018**

1. வேல்முருகன்
2. செல்லம்மாள்(இறந்துவிட்டார்)
3. இலஞ்சியம் ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. ராஜபாண்டியன்(இறந்துவிட்டார்)
2. செண்பகம்
3. பசீரா என்களைவி மேக்கர்ஸ் பிரைவேட் லிமிடெட் அதன் மானேஜிங் டைரக்டர் மூலம் ... 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்
4. சுப்பையா
5. செந்தில்குமார்
6. காமராஜ்
7. பாக்கியலட்சுமி
8. பெரியமுத்தம்மாள் ... 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 27.10.2022 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.தேரிராஜன் அவர்கள் ஆஜரான நிலையிலும் 2, 4 முதல் ,8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.ராஜாதேசிங் அவர்கள் ஆஜரான நிலையிலும் 3ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு. பி. காசிராஜன் அவர்கள் ஆஜரான நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுவில் கண்ட விபரப்படி அசல் நிறைவேறுதல் மனுவை சீர்திருத்தம் செய்யக் கோரி சிபிசி கட்டளை 6 விதி 17,18 மற்றும் பிரிவு 151ன் படி

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:–</u>

இறந்துபோன 1ம் எதிர்மனுதாரருக்கு வாரிசுகளை சேர்க்கக்கோரி இ.ஏ.எண். 98/2018 தாக்கல் செய்ததில் மேற்படி மனு 3.12.2020ம் தேதி அனுமதிக்கப்பட்டு விட்டது. எனவே நிறைவேறுதல் மனுவை சீர்திருத்தம் செய்து கொண்டு மனுவை மேல்நடத்த வேண்டியது அவசியமானதாகும். எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

3. 3ம் எதிர்மனுதாரர்தரப்பில் மறுப்புரை இல்லை என்று மனுவில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. <u>2, 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

8ம் எதிர்மனுதாரரின் பெயர் பெரியமுத்தம்மாள் ஆகும். 4 முதல் 8 எதிர்மனுதாரர்களின் வயது மனுவில் தவறுதலாகக் காட்டப்பட்டுள்ளது. 8ம் எதிர்மனுதாரரின் சரியான வயது 70, 6ம் எதிர்மனுதாரரின் சரியான வயது 47, 5ம் எதிர்மனுதாரரின் சரியான வயது 45, 4ம் மனுதாரரின் சரியான வயது 50 ஆகும். மேற்படி தவறுகளை மனுதாரர்கள் சீர்திருத்தம் செய்யாத நிலையில் மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

5. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரருக்கு வாரிசுகளை சேர்க்கக் கோரி இ.ஏ.எண்.98/2018 தாக்கல் செய்ததில் மேற்படி மனு 3.12.2020ம் தேதி அனுமதிக்கப்பட்டு விட்டதாகவும் எனவே நிறைவேறுதல் மனுவை சீர்திருத்தம் செய்து கொண்டு மனுவை மேல்நடத்த வேண்டியது அவசியமானது என்றும் கூறப்பட்டுள்ளது.

7. 2, 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 8ம் எதிர்மனுதாரரின் பெயர் பெரிய முத்தம்மாள் என்றும் 4 முதல் 8 எதிர்மனுதாரர்களின் வயது மனுவில் தவறுதலாகக் காட்டப்பட்டுள்ளதாகவும் மேற்படி தவறுகளை மனுதாரர்கள் சீர்திருத்தம் செய்யாத நிலையில் மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் கூறப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில் இ.ஏ.எண்.98/2018 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மனுவை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்தரப்பில் 8ம் எதிர்மனுதாரரின் பெயர் பெரிய முத்தம்மாள் என்றும் 4 முதல் 8 எதிர்மனுதாரர்களின் வயது மனுவில் தவறுதலாகக் காட்டப்பட்டுள்ளதாகவும் மேற்படி தவறுகளை மனுதாரர்கள் சீர்திருத்தம் செய்யாத நிலையில் மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி தவறுகள் திருத்தம் செய்யப்பட்டு சீர்திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2, 4 முதல் 8 எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவினை ஆட்சேபிக்க வேறு எவ்வித கடுமையான ஆட்சேபணைகளும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் 2, 4 முதல் 8 எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவினை ஆட்சேபித்து மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து எவ்விதக் கூற்றும் கூறவில்லை. 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், அவரது வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்தால்தான் அசல் மனுவை மேற்கொண்டு நடத்த இயலும். ஏற்கனவே இறந்துபோன 1ம் எதிர்மனுதாரருக்கு வாரிசுகள் சேர்க்கும்பொருட்டு இ.ஏ.எண்.98/2018 மனுத்தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனுவின் அடிப்படையில் அசல் மனுவை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். எனவே மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 10.11.2022 தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர், எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
இ.ஏ.எண்.1/20 இன்
இ.பி.எண்.9/2018
உத்தரவு நாள் – 10.11.2022